

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (07.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலர் டி.கே.ராமச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ராஜேந்திரகுமார்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில், மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சி பகுதிகள் வாரியாக அனைத்து பகுதிகளிலும் சீரான மின்சார விநியோகம், குடிநீர் விநியோகம் வழங்க மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன், வேளாண்மைத்துறை அரசு செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி,இ.ஆ.ப., வருவாய்த்துறை அரசு செயலர் திரு.சந்திரமோகன்,இ.ஆ.ப., வேலைவாய்ப்பு பயிற்சித்துறை இயக்குநர் திருமதி.பா.ஜோதி நிர்மலா சாமி இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி முகமை இயக்குநர் திரு.பாஸ்கரன்,இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ்,இ.ஆ.ப., மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

செ.வெ.எண் : 930/2017 நாள் : 07.12.2017

**கன்னியாகுமரி மாவட்டத்தில் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் மின் சீரமைப்பு குறித்து -**
**கண்காணிப்பு அலுவலர்கள் ஆய்வு.**

---

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வரும் மின்சாரம் மற்றும் குடிநீர் பணிகள் குறித்து கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்ப துறை முதன்மை செயலாளருமான திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில், வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திருமதி ஜோதிநிர்மலாசாமி இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.பிரகாஷ் இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை இயக்குநர் திரு.கா.பாஸ்கரன் இ.ஆ.ப, மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு. சமீரான் இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில், அனைத்துத்துறை அலுவலர்கள் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (07.12.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர்கள் தெரிவித்ததாவது:-

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயலால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளில் மின்கம்பங்கள், புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கும் பணிகளில் பல்வேறு மாவட்டங்களை சார்ந்த மின் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு, பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் குறித்த முன்னேற்றம் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது.

குறிப்பாக, அகஸ்தீஸ்வரம், தோவாளை ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் இன்று சீர்செய்ய பட்டு, மின்விநியோகம் வழங்கப்படும் என அலுவலர்கள் தெரிவித்துள்ளார்கள். நாளை விளவங்கோடு பகுதிகளுக்கும், நாளை மறுநாள் கல்குளம் பகுதிகளுக்கு மின்விநியோகம் வழங்கப்படும் என அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. நகராட்சிகளில் குளச்சல் நகராட்சியில் ஒருசில வார்டுகளை தவிர்த்து மற்ற நகராட்சிகளுக்கு 100 சதவீதமும், பேரூராட்சிகளில் 90 சதவீதமும் மற்றும் ஊராட்சிகளில் 60 முதல் 70 சதவீதமும் மின் விநியோகம் சீரான முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்விநியோகம் இல்லாத பகுதிகளில் ஜெனரேட்டர் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நிவாரண பணிகளை துரிதப்படுத்துவதற்காக 56 ஜே.சி.பி இயந்திரங்கள், 58 கிரேன், 65 மரம் வெட்டும் இயந்திரங்கள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு, பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின் விநியோகம் சீரானமுறையில் வழங்குவதற்கு மின்பணியாளர்கள் 24 மணிநேரமும் பணியாற்றி வருகிறார்கள். பெரும்பாலான பகுதிகளில் மரங்கள் விழுந்துள்ளதால், அம்மரங்களை அகற்றி, புதிய மின்கம்பங்களை அமைத்து, மின்விநியோகம் செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால், பெரும்பாலான பகுதிகளுக்கு மின்விநியோகம் சீரான முறையில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு குடிநீர் சீரான முறையில் வழங்குவதற்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அலுவலர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் உடனடியாக அறிக்கையை சமர்ப்பிக்க அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என கண்காணிப்பு அலுவலர்கள் தெரிவித்தார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**